[9th August 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The excavation programme at Kaveripattinam has been stopped this year by the Central Archaeological Survey due to emergency. The Special Officer for Archaeology, Madras, has stressed the importance of continuing the excavation at Kaveripattinam during the Central Advisory Board of Archaeology meeting held at Poona and the Director-General of Archaeology in India has assured that the excavation will be resumed as soon as financial position improves.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, காவிரிப்பூம்பட்டினத்திலே கடற்கரை ஓரங்களில் சுமார் 30 அடி அளவில் சோதிப்பது மட்டும்தான் இங்கு காணப்படுகிறது. கடற்கரையிலிருந்து உள்ளே 1½ மைல் தூரத்திலே மிகப் பழங்காலத்து பெரும் கோயில் இருப்பதும், இப்போதும் அங்கு ஏராளமான மீன்கள் இருந்து அதைப் பிடிப்பதற்குச் செல்லுகின்றவர்கள், முக்குளித்து அங்கு இருக்கும் செம்பு விக்கிரகங்கள், கற்சிலைகள் ஆகியவற்றை எடுத்து வந்து பக்கத்தில் உள்ள ஆலயங்களில் வைக்கப்பட்டிருப்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா ? அப்படியானால் அங்கே ஆராய்ச்சி நடத்துவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் இனிமேலாவது வகுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆராய்ச்சி பரிபூர்ணமாகத்தான் இருக்கவேண்டும். இந்த ஆராய்ச்சி வேலை தொடங்கி விட்ட பிறகு வேறு என்ன வகையிலே செய்யலாம் என்பது கவனிக்கப்படும்.

திரு. வை. சங்கரன் : டாக்டர் வேஸ் மார்ட்டின் அவர்கள் கண்டு ஆராய்ந்து என்ன என்ன பொருள்கள் கிடைக்கின்றன, என்ன என்ன பொருள்களைப் பார்க்கமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுடைய பூர்வாங்கமான ஆராய்ச்சிதான் இது. என்ன என்ன சொல்லியிருக்கிறார்கள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன் : நம்முடைய தமிழ்நாட்டிலே எந்தெந்த இடங்களுக்கு எல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு அவர்கள் சென்றார்கள் ? அது சம்பந்தமாக அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Institute of Library Science

* 243 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have set up any Institute in the State for imparting training in Library Science to untrained librarians working in libraries under the District and Local Library Authorities; and

(b) if so, the details thereof?

9th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Government have sanctioned a scheme, as an experimental measure for one year, for the setting up of an Institute of Library Science to give training to the unqualified Librarians employed under the Local Library Authorities and to meet the required number of qualified librarians under the Development programmes of the Local Library Authorities. The Institute is to function as one of the wings of the Connemara Public Library and under the overall charge of the Director of Public Libraries. The duration of the training course is three months and the first training course for a batch of 30 trainees commenced on 21st March 1966.

திரு. வை. சங்கரன் : தனியார் நூல் நிலையங்கள், தனிப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் இருக்கிற நூல் நிலையங்களில் லைப்ரேரியன்ஸ் அன்க்வாலிபைடாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் தகுதி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த ட்ரெயினிங் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

பொம்மை ஆட்டக் கலை

* 244 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பழங்கால தமிழ்நாட்டின் கலைகளில் ஒன்றான பொம்மை ஆட்டக் கலையை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) In 1965 the Government sanctioned a scheme for the establishment of a Training Centre for manufacture of Leather Puppetry. The total expenditure for two years for this scheme is Rs. 31,200. Six students are undergoing training in leather puppetry at the Central Leather Research Institute, Adyar, for a period of two years on payment of stipend of Rs. 75 per mensem each. The scheme is being implemented by the Madras Natya Sangh with the grant sanctioned by this Government.

புலவர் கா. கோவிந்தன் : இந்த பொம்மை ஆட்டங்கள் இரண்டு வகையாக நடைபெறுகின்றன. இராக்காலங்களில் திரை கட்டி நிழல்படமாக காண்பிப்பது ஒன்று. கயிறு கட்டி அதன் மூலமாகவும் பொம்மலாட்டம் காண்பிக்கிறார்கள். இவற்றில் எதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி பொம்மலாட்டத்திற்குத் தோல் பொம்மைகளைத் தயார் பண்ணுவது பற்றியது. இரண்டு விதமான பொம்மலாட்டத்திற்கும் இது பயன்படும்.